

சென்னை மாநகரில் மின் கட்டமைப்பை மேம்படுத்த கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கணேஷ் நகர் பகுதியில் 230/33 கிவோ துணை மின் நிலையம் அமைக்கும் பணி தமிழக முதல்வர் அவர்களால் 13.5.2023 அன்று துவங்கப்பட்டது. அப்பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வு 3.11.2023 அன்று நடைபெற்றது. இத்துணை மின்நிலையம் அமைவதால் கணேஷ் நகர், நேர்மை நகர், கொளத்தூர், பெரியார் நகர் மற்றும் விநாயகபுரம் பகுதிகளைச் சேர்ந்த சமார் 3.19 இலட்சம் மக்கள் பயன் பெறுவர். ஆய்வில் மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசுவும், அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபுவும், மின் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி IAS மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




சென்னையில் நேற்று தமிழ்நாடு மின்வாரியத் தலைமை அலுவலகத்தில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தமிழ்நாடு முழுவதும் சீரான மின் விநியோகம் வழங்குதல் மற்றும் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள மின்துறை சார்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களிடையே காணொலிக் காட்சி வாயிலாக விரிவான ஆய்வினை மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, அனைத்து இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டின் திட்டங்களைப் பின்பற்றும் மாநிலங்கள்

# முதல்வருக்குப் பெருமை சேர்க்கின்றன!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, நவ. 5 -

தமிழ்நாட்டின் பல திட்டங்களை பல மாநிலங்கள் பின்பற்றி தமிழகத்துக்கு பெருமை சேர்த்து வருகின்றன என ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

பொதுவாக என்ன பிரச்சினை என்றாலும், தமிழகத்தின் நிலைப்பாடு என்ன? என்றே அனைத்து மாநிலங்களும் உற்று நோக்குகின்றன. இது இன்று நேற்றல்ல, நீண்ட நெடுங்காலமாகவே நடந்துவருகிறது. சத்துணவு திட்டம், இலவச சைக்கிள் வழங்கும் திட்டம், இலவச சீருடை திட்டம், இலவச லேப்டாப் வழங்கும் திட்டம் என்று மாணவர்களுக்கான பல திட்டங்கள் இன்று பல்வேறு நிலங்களில் செயல்படுத்தப்படுகின்றன என்றால், அது தமிழ்நாடு காட்டிய வழிதான். அந்த வரிசையில் இப்போது, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சிந்தையில் உதித்த காலை உணவு திட்டமும் சேர்ந்துவிட்டது.

ஒரு நாள் சென்னையில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் ஆய்வு மேற்கொண்ட முதல்


தலையங்கம்

தினத்தந்தி

4.11.2023 (சனிக்கிழமை)

தமிழக திட்டங்களை பின்பற்றும் பிற மாநிலங்கள்!

அமைச்சர் மு.க.ஸ்டாலின், சில மாணவிகள் சோர்வாக இருப்பதைப்பார்த்து, “ஏன் சோர்வாக இருக்கிறீர்கள். காலையில் சாப்பிட்டீர்களா?” என்று கேட்டபோது, சில மாணவிகள் “இல்லை” என்றும், சில மாணவிகள் “பள்ளிக்கூடத்தில் போடப்படும் மதிய உணவை சாப்பிட்டுவிடுவோம்” என்றும் பதில் அளித்தவுடன், மனம் கலங்கினார். அதன் விளைவாக, அரசு பள்ளிக்கூடங்களில் முதல் வகுப்பில் இருந்து 5வது வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு தினமும் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை கொண்டுவந்தார்.

இப்போது 31 ஆயிரத்து 8 பள்ளிக்கூடங்களில் படிக்கும் 17 லட்சம் மாணவ-மாணவிகளுக்கு காலை உணவு வழங்கப்படுகிறது. இதற்காக பட்ஜெட்டில் ரூ.500 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த புரட்சிகரமான திட்டம் அனைத்து மாநிலங்களையும் வெகுவாக கவர்ந்தது. பல மாநிலங்கள் இந்த திட்டத்தின் செயல்பாடு குறித்து கேட்டறிந்தன. குறிப்பாக, தெலுங்கானா மாநில அரசு அதிகாரிகள் குழு இந்த திட்டத்தை ஆய்வு செய்ய, தமிழ்நாட்டுக்கு வந்து பல பள்ளிக்கூடங்களுக்கு சென்று பார்த்து, அவர்கள் அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்தனர்.

இதன் விளைவாக, தெலுங்கானா மாநிலத்திலும் 1ம் வகுப்பு முதல் 10ம் வகுப்புவரை படிக்கும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை முதல்மந்திரி சந்திரசேகரராவ் தொடங்கி வைத்தார். இதன்படி அந்த மாநிலத்தில் ரூ.400 கோடி செலவில் 28 ஆயிரம் அரசு பள்ளிக்கூடங்களில் இப்போது காலை உணவு வழங்கப்படுகிறது. 23 லட்சம் மாணவர்கள் இந்த திட்டத்தால் தினமும் காலை உணவை பள்ளிக்கூடத்துக்கு வந்து சாப்பிடுகிறார்கள். சிற்றுண்டி வகையை பொறுத்த மட்டில், தமிழ்நாட்டைப் போலவே தினமும் விதவிதமான உணவு வழங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அடுத்த சில தினங்களில் தேர்தலை சந்திக்க இருக்கும் தெலுங்கானா மாநிலத்தில், இந்த திட்டம் ஆளும் கட்சிக்கு மிகப்பெரிய பலமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கல்வித்துறையில் நிறைவேற்றப்பட்ட இந்த திட்டம்போல, மக்கள் நல்வாழ்வுத்துறையிலும் பல திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

இந்த திட்டங்களின் செயல்பாடுகளையும், தமிழ்நாட்டிலுள்ள மருத்துவ கட்டமைப்புகளையும் பார்வையிட குஜராத் மாநிலத்தில் இருந்து 60 மருத்துவத்துறை அலுவலர்கள் வந்திருந்தனர். அவர்கள் சென்னை, தாம்பரம், பூந்தமல்லி போன்ற பல இடங்களில் உள்ள பன்னோக்கு மருத்துவமனைகள், கலைஞர் நாற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நேரில் சென்று பார்த்து கேட்டறிந்தனர். தமிழ்நாட்டின் சிறந்த மருத்துவ கட்டமைப்புகளை அவர்கள் பாராட்டினர். மொத்தத்தில், தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் பள்ளிக்கூட மாணவர்களுக்கான காலை உணவு திட்டம், மருத்துவ திட்டங்கள் பல மாநிலங்களுக்கு முன்னோடி திட்டங்களாக இருப்பதோடு மட்டுமல்லாமல், தமிழகத்துக்கு பெருமையும் சேர்த்து வருகின்றன.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தேவகோட்டையில் ரூசோவின் 25 ஆவது ஆண்டு நினைவு நாள்!

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில் மவுன ஊர்வலம்!

சிவகங்கை, நவ.5

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையைச் சேர்ந்தவர் ரூசோ.கடந்த 8.11.1998, இதேநாளில் மரணம் அடைந்தார். ஆண்டு தோறும் நவம்பர் 8ம்தேதி

அவரது நினைவு நாள் மாவட்டக் கழகத்தின் சார்பில் அனுசரிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு வருகிற 8ம்தேதி 25வதுஆண்டு நினைவு நாள்ஆகும். அன்றையதினம் 8ம்தேதி புதன் கிழமை காலை 9.00மணி அளவில் எனது (அமைச்சர்



கே.ஆர்.பெரியகருப்பன்) தலைமையில் தேவகோட்டை தியாகிகள் பூங்காவில் இருந்து அமைதிப் பேரணி துவங்கி திருப்பத்தூர் சாலையில் உள்ள ரூசோவின் நினைவிடத்தை சென்றுஅடைகிறது. அங்கு எனது (அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன்) தலைமையில். மாவட்டகழக, நிர்வாகிகள், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், சார்புஅணி நிர்வாகிகள் உள்ளாட்சிப்பிரதிநிதிகள் மலர்அஞ்சலி செலுத்துகிறார்கள். இதில் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். என அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### வேளாண்மைத் துறையில் டி.என்.பி.எஸ்.சி. மூலம் தேர்வு செய்யப்பட்ட

# 213 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வழங்கினார்!

சென்னை, நவ.4-

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே. பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் (03.11.2023) வேளாண்மை ஆணையரகத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 213 தெரிவாளர்களில் 30 சுருக்கெழுத்து தட்டச்சர் (தரம்3) மற்றும் 183 தட்டச்சர்களுக்கு பணி நியமன ஆணையையும், 2021-2022 ஆண்டில் மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டியில் அதிக மகசூல் பெற்ற 18 விவசாயி களுக்கு பரிசுகள் வழங்கியும், பூச்சிக் கொல்லி அமலாக்க மேலாண்மை தகவல் இணையதளத்தை தொடங்கியும் வைத்தார்.

தமிழ்நாடு அரசு, விவசாயிகளின் நலனிற்காக பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, இத்திட்டங்கள் விவசாயிகளை சென்றடைவதற்கு போதிய தொழில்நுட்ப அலுவலர்களையும், நிர்வாகப் பணியாளர்களையும் நியமனம் செய்து வருகிறது. அந்த வகையில் 30 சுருக்கெழுத் துத் தட்டச்சர் (தரம்3) மற்றும் 183 தட்டச்சர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

விவசாயிகள், வேளாண்மை உழவர் நலத்துறை வழங்கி வரும் தொழில்நுட்பங்களை சரிவர கடைப்பிடித்து, அதிக மகசூல் பெறுவதை ஊக்குவிப்பதற்கு பயிர் விளைச்சல் போட்டியை நடத்தி வருகின்றது.

2021-22ஆம் ஆண்டு நிலக்கடலை, பருத்தி, கரும்பு, மக்காச்சோளம், சோளம், கம்பு, துவரை, பச்சைப்பயிறு, மற்றும் உளுந்து பயிர்களில் மாநில அளவில் முதல் மற்றும் இரண்டாம் பரிசு பெற்ற 18 விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

பூச்சிக்கொல்லி மருந்து உற்பத்தி ஆலைகள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து விற்பனை நிலையங்களுக்கு உரிமங்களை எளிய முறையில் இணையதளம் மூலம் பெறுவதற்கு, பூச்சிக்கொல்லி உற்பத்தி மற்றும் விற்பனை உரிமம் மேலாண்மை இணைய தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், நீண்ட இழைப் பருத்தி சாகுபடி பரப்பினை அதிகரித்து விவசாயிகளுக்கு அதிக இலாபம் கிடைத்திடவும் தமிழ்நாட்டில் உள்ள நூற்பாலைகளுக்குத் தேவையான தரமான பருத்திப் பொதிகளை கிடைத்திடவும் தென்னிந்திய நூற்பாலைகள் அசோசியேசன் (SIMA) மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானிகள் வேளாண் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஒரு கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டு தமிழ்நாட்டின் பருத்தி சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியினை அதிகரித்திட உரிய கருத்துரு அரசுக்கு அனுப்பிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து வரும் நிலையில், விவசாயிகள் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் சம்பா நெல் மற்றும் இதர பயிர்கள் நவம்பர் 15 ஆம் தேதிக்குள் காப்பீடு செய்து கொள்ள கேட்டுக் கொள்ளப் படுகிறது. மேலும் சில மாவட்டங்களில் மழைப் பொழிவு குறைவாக உள்ள நிலையில் விவசாயிகள் விதைப்பு மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. இவ்விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்வதன் மூலம் விதைப்பு செய்ய இயலாமை என்னும் இடர் நிகழ்வின் கீழ் இழப்பீட்டு தொகை பெற இயலும்.

இவ்விழாவில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச்செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மை ஆணையர் முனைவர் இல. சுப்பிர மணியன், வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பணி மேலாண்மை), திருமதி. ஸ்ரேயா பி.சிங், தோட்டக் கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, தலைமைப் பொறியாளர் (வே.பொ) ஆர். முருகேசன் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### “மக்களின் உரிமைகளை தோற்கடிக்கும்” சக்திகளுக்கு கடிவாளம் தேவை!

# நீதிமன்றத்தின் கடிவாளம் இறுகினால்தான் ஜனநாயகம் பிழைக்கும்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, நவ. 5 -

மக்களின் உரிமைகளை தோற்கடிக்கும் சக்தி எதுவாக இருந்தாலும், அதற்கு கடிவாளம் போட வேண்டிய காலக்கட்டம் நெருங்கியுள்ளதாகவும், நீதிமன்றத்தின் கடிவாளம் இறுகினால் தான் ஜனநாயம் பிழைக்குமெனவும் ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

மாநில அரசு நிறைவேற்றி அனுப்பும் சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் தர ஆளுநருக்கு கால வரம்பு நிர்ணயம் செய்யக் கோரி தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது, இந்த வழக்கு, விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த மார்ச் மாதம் தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜனுக்கு எதிராக தெலங்கானா மாநில அரசு உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில், “மாநிலங்களில் அரசியல் சாசன தலைமை (கவர்னர். அரசியல் சாசனத்தின் 200வது பிரிவை மனதில் கொள்ளவேண்டும், ஒப்புதலுக்காக மசோதாக்கள் அனுப்பப்படு கிறபோது அவற்றை கிடப்பில் போடக்கூடாது. தங்களுக்கு ஒப்புதல் இல்லாத மசோதாக்களை சட்டப்பேரவையின் மறு ஆய்வுக்காக கூடிய விரைவில் அதற்கான குறிப்புடன் திருப்பி அனுப்பி விட வேண்டும்” என உத்தரவு பிறப்பித்தது. இது, தெலங்கானாவுக்கு மட்டும் பொருந்தாது. எல்லா மாநில ஆளுநர்களுக்கும் உச்ச நீதிமன்றம் கொடுத்த, முதல் எச்சரிக்கை ஆகும்.

தெலங்கானாவை தொடர்ந்து தமிழ்நாடு அரசும், உச்ச நீதிமன்றத்தை நாடியுள்ளது. பல்கலைக் கழகங்களுக்கு துணை வேந்தர்களை நியமிக்க மாநில அரசுக்கே அதிகாரம் உள்ளது என்பது உள் பட 13 மசோதாக்களை சட்டசபையில் நிறைவேற்றி அனுப்பியும் அதற்கு ஆளுநர் ஆர்.என்.ரவி பல மாதங்களாக ஒப்புதல் அளிக்காமல் நிலுவையில் கிடப்பில் போட்டிருப்பதையும், இவ்விவகாரத்தில் ஏற்கனவே உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் தமிழ்நாடு அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ்நாட்டை தொடர்ந்து கேரளாவும், அம் மாநில அரசின் கவர்னர் ஆரிப் முகமது கானுக்கு எதிராக, உச்ச நீதிமன்றத்தை அணுகியுள்ளது. சமீபத்தில், பஞ்சாப் மாநில சட்டசபையின் சிறப்பு அமர்வில், ஆம் ஆத்மி அரசாங்கத்தால் முன்


தினகரன்

கடிவாளம்

மொழியப்பட்ட 3 பண மசோதாக்கள், ஆளுந ரின் முன் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டன. ஆனால் அவற்றை ஆளுநர் பன்வாரிலால் புரோகித் நிறுத்தி வைத்துள்ளார். இதனால் சிறப்பு சட்டசபை கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டது. எனவே, ஆளுநரை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தை நாடப்போகிறோம். என அம் மாநில முதல்வர் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். “மக்களின் உரிமைகளை தோற்கடிக்கும்” சக்தி எதுவாக இருந்தாலும், அதற்கு கடிவாளம் போட வேண்டிய காலக்கட்டம் நெருங்கியுள்ளது. உச்ச நீதிமன்றம் என்ன மாதிரியான உத்தரவு களை வழங்கப்போகிறது என்ற எதிர்பார்ப்பு எகிறியுள்ளது. நீதிமன்றத்தின் கடிவாளம் இறுகினால், ஜனநாயகம் பிழைக்கும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வண்ணை தேவகி

**நவம்பர் 5 (2009)**



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது கொள்கைப் பற்றாலும், பேச்சாற்றலாலும் தன்னலம் கருதாத் தியாகத்தாலும் ஈர்க்கப்பட்டு, இளம் வயதிலேயே கழக மேடைகளில் உரையாற்றியவர்.

கழகம் நடத்திய போராட்டங்களில் எல்லாம் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

கழக மகளிர் அணியின் செயலாளராகவும், துணைத் தலைவராகவும், இணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து வந்தவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநகராட்சி சுகாதாரநிலைக்குழுவின் தலைவராக திறம்பட பணியாற்றியவர்.

முதல்வர் கலைஞர் அவர்கள் 1999ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் ‘அம்பேத்கர் விருது’ வழங்கி சிறப்பித்தார்.

“கழகம், கழகம் என்று தன் வாழ்நாள் முழுவதையும் கழகத்திற்காகவே செலவழித்து, அவர் பேசாத கிராமங்களே இல்லையென்ற அளவிற்கு, கழகப் பிரச்சாரத்தில் தன் இளம் பிராயத்திலிருந்து ஈடுபட்டவர்” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை மு. சுலைமான்

**நவம்பர் 5 (1983)**



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

கோவை மாவட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.

நெருக்கடி காலத்தில் மிசா சட்டம் அமல்படுத்தப்பட்ட போதும், தைரியமாக முரசொலி முகவராக பணியாற்றியவர்.

கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனராக பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**